டன் சர்க்கரை நமக்குத் தேவைப்படுகிறது. இந்தத் தேவையை நாட்டுச் சர்க்கரையைக் கொண்டு நாம் பூர்த்தி செய்ய முடியாது என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே நான் தெரிவித்தேன். அதுமட்டுமல்லாமல், பொங்கல் பண்டிகை மற்றும் இதர விசேஷ நாட்களில் மக்கள் நாட்டுச் சர்க்கரையைப் பயன்படுத்துவது கிடையாது. வெல்லம், உருண்டை வெல்லம் போன்றவற்றைத்தான் நமது கிராமப்புறங்களில் பயன்படுத்துகிறார்கள். எனவே, நாட்டுச் சர்க்கரைமீது மிகுந்த பற்றோடு, விவசாயிகளுடைய கோரிக்கைகளைக் கேட்டு, அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்கிற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அவருடைய கேள்வி நாட்டுச் சர்க்கரையாக இருந்தாலும், நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதினால், அதைச் செயல்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. வெற்றிவேல், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

155—

தரம் உயர்த்துதல்

***8378—திரு. ச. வெற்றிவேல்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலுள்ள காடையாம்பட்டி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசினால் சமீபத்தில், 2016–ல் தாலுகாவாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் கொள்கையின்படி, உறுப்பினர் விரும்புகின்றபடி காடையாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம், தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. வெற்றிவேல் அவர்கள்.

திரு. ச. வெற்றிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். காடையாம்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம், தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்ற நல்ல செய்தியைச் சொன்ன மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில், திருவாரூரில் சிறப்பான ஒரு மருத்துவக் கல்லூரியைக் கொண்டுவந்தார்கள். தற்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மதுரை மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிகளில் 100 மருத்துவ இடங்களை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோன்று, தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திருவாரூர் மருத்துவக் கல்லூரியில், இந்த ஆண்டு அதிகபட்சம் 50 மருத்துவ இடங்களையாவது உயர்த்திக் கொடுப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா? அதோடு, திருவாரூர் அரசு மருத்துவக்

கல்லூரியில் மருத்துவர்கள் குறைவாக இருக்கிறார்கள். எனவே, தேவையான மருத்துவர்களை நியமிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து மருத்துவக் கல்லூரிகளிலே மிக அதிக கவனம் செலுத்தி வருகிறது. அந்தவகையிலே, தொடர்ந்து M.B.B.S. இடங்களை நாம் அதிகரிக்கின்றோம். ஒன்று புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவது; மற்றொன்று, ஏற்கெனவே இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிகளிலே இடங்களை அதிகப்படுத்துவது. அந்த வகையில் திருவாரூர் மருத்துவக் கல்லூரியில் 50 இடங்களைக் கூடுதலாக உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதாவது, ஒரு மருத்துவக் கல்லூரிக்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான் additional intake–க்காக, நாம் Medical Council of India–விடம் விண்ணப்பிக்க முடியும். அப்படி விண்ணப்பிக்கின்றபொழுது 100 இடங்களாக விண்ணப்பிக்க வேண்டுமென்பது அரசினுடைய கொள்கை. அந்தவகையிலேதான் நாம், இந்த ஆறு ஆண்டுகளிலே இந்திய வரலாற்றிலேயே வேறு எந்த மாநிலமும் செய்திராத சாதனையாக, 1,000 M.B.B.S. இடங்களைக் கூடுதலாகப் பெற்றிருக்கின்றோம். இந்த ஆண்டு இரண்டு கல்லூரிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். வரும் காலங்களில் திருவாரூர் மருத்துவக் கல்லூரி அரசினுடைய கனிவான பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும். அப்படி உயர்த்துகின்றபொழுது 50 இடங்கள் அல்ல; 100 இடங்களுக்கு Medical Council of India–விடம் விண்ணப்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னொன்று, நீங்கள் மருத்துவர் பணியிடங்கள் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். இப்பொழுது M.R.B. மூலமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், நான் திருமதி கு. சித்ரா அவர்களைக் கூப்பிட்டேன், நீங்கள் உட்காருங்கள்.

திருமதி கு. சித்ரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என வாழ்ந்து மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி, ஏற்காடு ஒன்றியத்தில் அரசு மருத்துவமனை இருக்கிறது. அதில் மருத்துவர்களும், செவிலியர்களும் குறைவாகவே உள்ளனர். மருத்துவச் சிகிச்சைக்காக வருபவர்கள் அதிக நேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பொது மக்கள் நலன் கருதி மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை தேவைக்கேற்ப நிரப்பிடவும், மருத்துவமனையைச் சுற்றி சுற்றுச் சுவர் அமைத்திடவும், பிரேதப் பரிசோதனைக் கட்டடம் கட்டித் தரவும் அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஏற்காடு சட்டமன்றத் தொகுதியிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோரிக்கை எல்லாம் கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சேலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ச. வெற்றிவேல், அவர்களுக்கு நல்ல செய்தியைச் சொன்னதுபோல, சேலம் மாவட்டத்திற்கே நல்ல செய்தி காத்திருக்கின்றது.

இந்த JICA திட்டத்தின் மூலமாக சேலம் மாவட்டம், பிரதானமாக எடுக்கப்பட்டு, சேலம் மருத்துவக் கல்லூரிக்கு 5 கோடியே 80 இலட்சம் ரூபாயிலே கட்டடங்களும், மருத்துவ உபகரணங்களும், அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள் குறிப்பிட்டுள்ள மணியனூர் மருத்துவமனைக்கு 32 கோடியே 86 இலட்சம் ரூபாயில் மருத்துவமனைக் கட்டடங்களும், மருத்துவ உபகரணங்களும் வழங்கிடும் வகையில், ஒட்டுமொத்தமாக சேலம் மாவட்டத்திலே மருத்துவப் பணிகள் மிகச் சிறப்பாக அரசின் சார்பிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் குறைவாக இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அதுவும் குறிப்பாக, இந்த ஆண்டு அரசுப் பணிகளிலே இருந்தவர்களுக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு P.G.–யில் இல்லை என்ற பிறகு. அங்கு நியமிப்பது உங்களுக்குக் கடினமானதாகத்தான் இருக்கும் என்பதையும் நான் நன்கு அறிவேன். எங்கள் மாவட்டத்திலுள்ள பாவந்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரேயொரு மருத்துவர்தான் இருக்கிறார்; நோயாளிகள் மிக அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, நோயாளிகளின் நலன் கருதி, சிறப்புச் சலுகைகளை அளித்து, ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்களை உடனடியாக நியமித்திட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் 505 மருத்துவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் பணி நியமன ஆணைகளைப் பெற்று, பணியில் சேர்ந்திருக்கிறார்கள். இப்பொழுது 1,227 பணியிடங்கள் நிரப்பப்படும் என்று அறிவிப்புகளில்

வெளியிட்டிருக்கின்றோம். ஏற்கெனவே தேர்வு முடிந்து, மதிப்பெண் பட்டியல் எல்லாம் வெளியிடப்பட்டு, இப்பொழுது, சான்றிதழ் சரிபார்ப்புப் பணி நடந்துகொண்டிருக்கிறது. அதிகபட்சம் 10 வேலை நாட்களுக்குள்ளாகவே அவர்கள் கலந்தாய்வு மூலமாகப் பணியமர்த்தப்படுவார்கள். தாங்கள் குறிப்பிடுகின்ற அந்த ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட மருத்துவமனைகளில், இருக்கின்ற அனைத்துக் காலிப் பணியிடங்களும் கலந்தாய்வின்மூலம் பத்து நாட்களிலே நிரப்பப்படும் என்பதை நான் உறுதியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

முற்பகல் 11–05

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்"

என்ற வள்ளுவர் வாக்கு தூக்கம் கடிந்து, துக்கம், துயர் பாராது அயராது உழைக்கும் காவல் துறைக்குப் பொருந்தும். காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெறும் இந்நாளில், காவல் துறை மேம்பாட்டிற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளை இம்மாமன்றத்தில் முன் வைத்தது பெருமையளிக்கிறது. தவக்கத்தில் உள்ள 49,000–க்கும் மேற்பட்ட பதவி உயர்வுகளை காவல் ஆளினர்களுக்கு அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையினர் மனம் குளிரும் வகையில் அவர்களது ஊதிய நிர்ணயம், இடர் படி, பயணப் படி, உரிய நேரத்தில் காவலர், தலைமைக் காவலர், சிறப்பு சார் ஆய்வாளர்களுக்குப் பதவி உயர்வு, காவல் அமைச்சுப் பணியாளர்களின் குறைகள், இவற்றைப்பற்றி நல்ல அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

2017 ஜூலை 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.பி. இராமசாமி சாலையில் பல்நோக்கு மருத்துவமனை ஒன்று சமுதாயக் கூடம் அருகில் உள்ளது. அதை பல்நோக்கு பல் மருத்துவமனை என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால், அது Multi Speciality *மருத்துவமனையா என்ற சந்தேகம் இருக்கிறது. அது செயல்படாமல் இருக்கிறது. அதனைச் செயல்பட வைப்பதற்கு ஆவன செய்யுமாறு, தங்கள்மூலம், 108 அறிவிப்புகள் நாயகர் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்தும் அறிவிப்பு செய்ய வேண்டுமென்றுதான் ஆசை. இருந்தாலும், அவர் தொகுதியில் இருக்கின்ற மருத்துவமனை சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அவர்களுடைய கோரிக்கையை நானும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குப் பரிந்துரை செய்கிறேன். இந்த அரசு அதற்கு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பன்றிகளை வனத் துறையின் மூலமாகவே சுட்டுக் கொல்லலாம் என உத்தரவு பிறப்பித்திருக்கின்ற மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

எனது மேட்டுப்பாளையம் தொகுதியில் 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. அதில், காரமடை ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, நல்ல முறையிலே இயங்கி வருகிறது. அதேபோல, ஸ்ரீரூரில் உள்ள ஆரம்ப சுகாதார

நிலையமானது மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டி 50–க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியில் அமைந்துள்ளது. அங்கு இருக்கின்ற மலைவாழ் மக்கள் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில்தான் சிகிச்சை பெற்று வருகிறார்கள். சில சமயங்களில், விபத்து ஏற்படுகின்ற நேரங்களிலும் மற்றும் மகப்பேறு சிகிச்சைக்காக வருகின்ற நேரங்களிலும் மருத்துவமனையிலேயே தங்கி சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்த மருத்துவமனையையும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சுகாதார வட்டாரத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத்தான் தரம் உயர்த்த வேண்டும் என்ற நிலை இருந்தாலும், இதை சிறப்பு இனமாகக் கருதி, மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியான ஸ்ரீரூர் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டும் அல்லது இந்த சுகாதார வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஸ்ரீரூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மலைவாழ் மக்கள் பயன்படுத்தத்தக்க வகையில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித் தர வேண்டும். இதனை செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துகின்ற திட்டத்தின்கீழ், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போலவே, ஒரு வட்டாரத்திற்கு ஒன்று என்றிருந்தாலும், தங்களது தொகுதிகளில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களை, கூடுதல் படுக்கை வசதிகள் கொண்டதாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று தொடர்ந்து அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்புக் கவனத்திற்கு எடுத்துச்சென்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று, அதிக நோயாளிகள் வரக்கூடிய, அதிக பிரசவங்கள் நடக்கக்கூடிய

பகுதிகள் மற்றும் மலைவாழ் மக்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் முன்னுரிமை கொடுத்து, இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையில் தரம் உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றுகின்ற வகையில், நிதித் துறையின் ஒப்புதலைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல அறிவிப்புகளை அறிவிப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

156—

மணிமண்டபம்

***13868—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, விளாத்துறை ஊராட்சி, காப்புக்காடு சந்திப்பில் தொல்காப்பியருக்கு மணிமண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜூ, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, விளாத்துறை ஊராட்சி, காப்புக்காடு சந்திப்பில் தொல்காப்பியருக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*